சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2011–12ம் ஆண்டு மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசுத் தேர்வுகள் – பத்தாம் வகுப்பு / பனிரெண்டாம் வகுப்புகளுக்கான நடைமுறையில் உள்ள சிறப்பு துணைப் பொதுத் தேர்வு திட்டத்தினை மாணவர் நலன் கருதி விரிவுபடுத்தி நடைமுறைப் படுத்துதல் – பள்ளிகள் மூலமாகவும், தனித்தேர்வர்களாகவும் மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வுகள் எழுதியர்வர்களுக்கு மட்டும் அவ்வாண்டு ஜுன் / ஜுலை சிறப்பு துணைப் பொதுத் தேர்வில் அவர்கள் தேர்ச்சிப்பெறாத அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கு அனுமதித்து 2012 ஜுன் / ஜுலை சிறப்பு துணைப் பொதுத் தேர்வு முதல் நடைமுறைப்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (வி1) துறை

அரசாணை (நிலை) எண் 139. நாள்: 12.09.2011.

திருவள்ளுவராண்டு 2042.

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் 11.4.2002
2. அரசாணை (நிலை) எண்.74, பள்ளிக்கல்வி(வி1) துறை, நாள் 4.6.2003
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.032733/எச்.1/2011, நாள் 2.8.2011

--------

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலை மற்றும் 10ம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ இந்தியன் ஆகிய வகுப்புகளுக்கான மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தோல்வியுறும் மாணவ/மாணவிகளுக்கு மட்டும் 2002ம் ஆண்டு ஜுன்/ஜுலை முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜுன்/ஜுலை மாதங்களில் ஒரு சிறப்பு துணை பொதுத் தேர்வு நடத்தவும், வழக்கமாக நடைபெறும் பொதுத் தேர்வின் விதிமுறைகளையே இச்சிறப்புப் பொதுத் தேர்வுக்கு பின்பற்ற வேண்டும் என்றும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இச்சிறப்பு துணைப் பொதுத் தேர்வில் மூன்று பாடங்களில் தோல்வியுற்றவர்களும்/வருகை புரியாதவர்களும் தேர்வெழுதலாம் என ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

2. 2011–12ம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

“10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு அந்த முழுக் கல்வியாண்டு வீணாகாமல், அந்த ஆண்டிலேயே அவர்கள் உயர் கல்வியினை தொடர்வதற்கு ஏதுவாக 2002ஆம் ஆண்டு முதல் ஜுன்/ஜுலை

மாதத்தில் ஒரு சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மாணவர்களின் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது நீட்டிப்பு செய்து, ஒவ்வொரு கல்வியாண்டிலும் பள்ளிகள் மூலமாகவும், தனித் தேர்வர்களாகவும் மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு, தேர்ச்சி பெறாத அனைத்து பாடங்களுக்கும் அக்கல்வியாண்டிலேயே ஜுன்/ஜுலை மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு எழுதுவதற்கு அனுமதித்து வரும் கல்வியாண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்''

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மார்ச்/ஏப்ரல் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டு சுமார் ஒரு மாத கால இடைவெளியில் சிறப்பு துணைத்தேர்வு நடத்தப்படுகிறது. பள்ளி மாணாக்கரைப் பொறுத்தவரையில் மார்ச் பருவத்தில் தோல்வியுற்ற / வருகை புரியாதவர்களின் எண்ணிக்கையினை மிகத்துல்லியமாக அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து பெற்று, பாடவாரியாகத் தேவைப்படும் வினாத்தாட்களின் எண்ணிக்கையினைக் கணக்கிட சாத்தியமாகிறது. மேலும், பெயர்ப்பட்டியல் பெறுவதும் எளிதாகிறது. ஆனால், இச்சிறப்புத் துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் இதர தனித்தேர்வர்களின் எண்ணிக்கையினை, அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று ஆய்வு செய்து விவரங்களை அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு அச்சமுத்தம் செய்ய அளிக்கவும் பாடவாரியாகத் தேவைப்படும் வினாத்தாட்களின் எண்ணிக்கையினை துல்லியமாகக் கணக்கிடவும் பெயர்ப்பட்டியல் பெறவும் போதிய கால அவகாசம் இல்லாததால் இச்சிறப்பு துணைத் தேர்வு முன்பணிகள் பெரிதும் பாதிப்படைகிறது. எனவே, இந்நடைமுறையில் மாற்றம் செய்து பள்ளி மாணாக்கராகவும், தனித் தேர்வர்களாகவும் மார்ச் பருவ தேர்வு எழுதியவர்களுக்கு மட்டும் சிறப்பு துணைப் பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கவும், மாணவர்கள் நலன் கருதி சிறப்புத் துணைப் பொதுத் தேர்வில் மூன்று பாடங்கள் மட்டுமே எழுத அனுமதி என்ற நிபந்தனையை தளர்த்தி பாடங்களின் எண்ணிக்கை வரம்பின்றி எழுத அனுமதிக்கலாமென அரசுத் தேர்வுகள் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு நன்கு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :–

1. ஒவ்வொரு கல்வியாண்டிலும் மார்ச் பருவத் தேர்வில் பள்ளி மாணாக்கராகவும், தனித் தேர்வர்களாகவும் தேர்வெழுதித் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டும், அக்கல்வியாண்டில் தொடரும் ஜுன்/ஜுலை சிறப்பு உடனடித் தேர்வெழுத அனுமதிக்கப்படுகிறது.

2. மேலும், ஜுன்/ஜுலை பருவத்தில் சிறப்பு துணைத் தேர்வில் அதிகபட்சம் மூன்று பாடங்கள் வரை மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர் என்ற நிபந்தனையை மாணவர்கள் நலன் கொண்டு தளர்வு செய்து ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மார்ச் பருவத்தில் தேர்வெழுதியோர் தேர்ச்சி பெறாத பாடங்களை தொடரும் ஜுன்/ஜுலை பருவத்தில் நடைபெறும் சிறப்பு துணைத் தேர்வில் பாடங்களின் எண்ணிக்கை வரம்பின்றி தேர்வெழுத அனுமதிக்கப்படுகிறது.

5. மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு நடைமுறைகளையும் வரும் ஜுன்/ஜுலை 2012 சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.

நகல்
பள்ளிக் கல்வி (வ.செ.) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / கூடுதல் நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.